## 6. நன்றிப் பாடல்

நன்றி சொல்லி நாளும் பாடுவோம் - கோடி
நன்மை செய்யும் இயேசு ராஜனை (2)
நமது வாழ்க்கையே உயர்ந்த நன்றியாம் - 2
நன்மை நெறியில் நாளும் நடந்து
நலன்கள் யாவும் நட்பில் பகிர்ந்த

விண்ணும் மண்ணுமே காணும் யாவுமே
கடவுள் தந்த கொடைகள் அல்லவா
வலிமை இழந்தவர் வாழ்வில் வசந்தம் பெறுவதும்
வள்ளல் இயேசு தயவில் அல்லவா (2)
அமைதி வரும் அருள் நிறையும் அவர் வரவில் புது உறவில்
அன்னை போல அன்பு காட்டி
நம்மைக் காக்கும் தேவன் பெயரை

கவலை யாவுமே கலைந்து போனதே
கண்ணைப் போல என்னை இயேசு காப்பதால்
சோகமில்லையே இனி சுகமே எல்லையே
தேற்றும் தெய்வம் தேடி வந்ததால் (2)
சுமை சுமக்கும் தோள்களுக்கு சுகம் தருவார் துணை வருவார்
அச்சம் நீக்கி அன்பு தந்து
அருளைப் பொழியும் தேவன் புகழை

## 7.மாதா பாடல்

அன்னைமாமரி எங்கள் அன்பின் மாமரி என்றும்
உந்தன் புகழைப் பாடுவோம்
தேடும் மாந்தரைத் தேற்றிக் காத்திடும்
உந்தன் அருள் வரங்கள் இன்று தேடினோம்

எண்ணிறந்த உதவிகளைப் பெற்றுத் தந்த நீ
எங்கள் வாழ்வில் உடனிருந்து காத்து வருகின்றாய் (2)
நன்றிப் பூக்கள் ஒன்று சேர்த்தோம் உந்தன் பாதத்தில்
சகாயத் தாய்மரியே எம்மை
அரவணைத்துக் காப்பாய் நீயே (2)

அண்ணல் இயேசு அன்பு வழியைக் கற்றுத் தந்தஉன்
அன்புமிகு ஆதரவில் அச்சம் நீங்குதே (2) நன்றிப் பூக்கள்...

# மாதந்த திருப்பலிப் பாடல்கள்
# மே-2016

## 1.வருகைப்பாடல்

அணி அணியாய் வாருங்கள் அன்பு மாந்தரே
ஆண்டவர் இயேசுவின் சாட்சி நீங்களே (2)

அன்புப்பணியாலே உலகை வெல்லுங்கள்
இன்ப துன்பம் எதையும் தாங்கிடுங்கள் (2)
எளியவர் வாழ்வில் துணைநின்று
இயேசுவின் சாட்சியாய் நிலைத்திருங்கள் (2)

மண்ணகத்தில் பொருளைச் சேர்க்க வேண்டாம்
மறைந்து ஒழிந்து போய்விடுமே (2)
விண்ணில் பொருளை தினம் சேர்த்து
இயேசுவின் சாட்சியாய் நிலைத்திருங்கள் (2)

இப்பாடல்களின் ஒலி(mp3) வடிவம் எமது பணியக இணையத்தளமாகிய
**www.tamilcatholicnews.com**
இல் தரவிறக்கம் செய்யலாம்.

**2.தியானப்பாடல்**

இறைவார்த்தை கேட்டு இதயத்தில் ஏற்று
எந்நாளும் வாழ்ந்து என்றும் பறைசாற்று (2)

வாழ்வுதரும் வார்த்தை தானே வழிகாட்டிடும்
வல்லமைதானே 2
வேறென்ன வேண்டும் வேதனைகள் போக்க
விரும்பாத மனங்கள் விழிநீரைச் சுமக்கும்
வாழ்வாகும் வார்த்தை அவரே
வழிபாட்டில் வரம் கேட்டு நிற்போம் -2

உண்மை சொல்லும் உந்தன் வார்த்தை
உறவைப் பேணும் உணர்ந்தோம் என்றால் (2)
உருவாக்கும் எம்மை உம் சொல்லில் வாழ்ந்தால்
ஊரெங்கும் அமைதி உன்னாலேதானே என் இயேசு
தெய்வமே
எதாக மாறு எல்லாமேயாகு - 2

**3.காணிக்கைப் பாடல்**
காணிக்கை தரும் நேரம்
நான் என் மனம் தருகின்றேன் -2
ஏற்றருளும் தெய்வமே எளியவன் தருகின்ற
காணிக்கையை -2

படைப்புகள் பலவாகினும் பரமன் உமக்கே
சொந்தம் -2
அதில் மலராகும் என் மனம் உன்னிடத்திலே -2
மணம் காண ஏற்றிடுமே -2

பிறரன்புப் பணிகளெல்லாம் தலைவன் உமதன்றோ
-2
என்றும் உமதன்புப் பணியில் என் வாழ்வினை -2
பலியாக ஏற்றிடுமே -2

**4.பரலோக மந்திரம்**

பரலோகத்தில் இருக்கின்ற
எங்கள் பிதாவே எங்கள் பிதாவே
உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுக.
உம்முடைய இராச்சியம் வருக
உம்முடைய சித்தம் பரலோகத்தில்
செயற்ப்படுவது போல்
பூலோகதிலும் செய்யப்படுவதாக
எங்கள் அநுதின உணவை இன்று
எங்களுக்கு அளித்தருளும்
எங்களுக்கு தீமை செய்தோரை
நாங்கள் பொறுப்பது போல்
எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்
எங்களைச் சோதனயில் விழவிடாதேயும்
தீமையில் இருந்து இரச்சித்தருளும்

ஆண்டவரே தீமையில் இருந்து
எங்களை விடுவித்து
எம்வாழ்நாளில் சமாதானத்தை
அருள்புரிய உம்மை மன்றாடுகின்றோம்
உமது இரக்கத்தின் துணையால் நாங்கள்
அடிமையில் இருந்து விடுதலை பெற்று
நிறைவாழ்வு பெறுவோமாக

நாங்கள் நம்பும் பேரின்ப வாழ்வை
இயேசுவின் வருகையை எதிர்பார்க்கின்றோம்
ஏனெனில் அரசும் வல்லமையும்
மாட்சிமையும் என்றும் உமதே

**5.திருவிருந்துப் பாடல்**

உறவைத் தேடி இறைவன் இங்கு வருகிறார்
நிறைவைத் தந்து நம்மில் இன்று வாழ்கிறார்
உள மகிழ்ச்சியில் நமை நிறைத்திட
அவர் மாட்சியில் நாம் நிலைத்திட
மனக்கதவைத் திறந்து அன்பை நாளும்
பொழிகிறார்

அமைதி அன்பு நிலைத்திடவே அருமைத்
தோழனாய்
அழைத்துச் செல்ல நேசக்கரம்
நீட்டி வருகிறார் (2)
காடும் மலையும் கடலின் அலையும் என்ன
செய்திடும்
அன்பர் இயேசு நம்மில்
என்றும் நிலைத்து இருப்பதால் (2)

உரிமை வாழ்வைத் தந்திடவே உண்மை
நண்பனாய்
உணர்வுபெற்று வாழ்ந்திடவே
உயிர்த்து வருகிறார் (2)
சாவும் பிணியும் பேயின் பிடியும் என்ன செய்திடும்
அன்பர் இயேசு நம்மில்
என்றும்நிலைத்து இருப்பதால் (2)